# Principal District Munsif Court, Sankarankovil.

தேதி : 12.08.2022
அ.வ.எண். 362/2015
வா.சா.1
<u>வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாண வாக்குமூலத்தின்பேரில் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :–

நான் ஓய்வுபெற்ற ஆசிரியர். பிரதிவாதியின் எதிர்வழக்குரையை படித்து பார்த்தேன். எதிர்வழக்குரையை மறுத்து எனது தரப்பு பதிலுரை எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் எனது வழக்கறிஞர் தாக்கல் செய்திருப்பார். 1ம் தபசில் சொத்து 20.02.1984 நான் கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். எதிர் வழக்குரையில் 1ம் தபசிலாக காட்டப்பட்டுள்ள சொத்து 1ம் பிரதிவாதி 20.02.1984 தேதியில் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் 2ம் தபசில் சொத்து 1ம் பிரதிவாதியால் 1995 ல் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். எனக்கும் 2ம் வாதிக்கும் பிறந்த குழந்தைதான் ரவி கல்யாணசுந்தரம் என்றால் சரிதான். ரவி கல்யாணசுந்தரத்திற்கு 1ம் பிரதிவாதி சர்வே நம்பர் 91/2 ல் உள்ள சொத்தை செட்டில்மெண்ட் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். அவ்வாறு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி தந்த போது நான் உடன் இருந்தேன் என்றால் சரிதான். நாங்கள் கூட்டு குடும்பமாக இருந்தோம். 2ம் பிரதிவாதி எனது மகன். பார்வதி எனது 2ம் மனைவி என்றால் சரிதான். செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். செட்டில்மெண்ட் ஆவணம் பத்திர ஏற்பாடு நான் செய்தேனா என்றால் இல்லை. செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்த தேதியில் நான் பிராது 1ம் தபசில் சொத்தை 1ம் பிரதிவாதிக்கு (Exchange) பரிவர்த்தன ஆவணம் செய்துதருவதாக கூறினேன் என்றால் சரியல்ல.

1ம் தபசில் சொத்தை 1ம் பிரதிவாதிக்கு எழுதிதருவதாக கூறி ரவி கல்யாணசுந்தரத்திற்கு சர்வே எண் 91/2 சொத்தை செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. 1ம் தபசில் சொத்தை 1ம் பிரதிவாதி அவரது மகன் 2ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்திருக்கிறேன். செட்டில்மெண்ட் ஆவணத்தையின்

அடிப்படையில் 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்படுத்தியுள்ளது என்றால் அது கூட்டுபட்டாவாக இருக்கிறது. வா.சா.ஆ 3 செட்டில்மெண்ட் ஆவணத்தில் பட்டா எண். 158ல் வேதநாயகம் மனைவி பார்வதி என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி ரத்தினம் திருமணம் ஆனபிறகு 2 , 3 ஆண்டுகள் கழித்து தான் எங்களுக்குள் பேச்சுவார்த்தை கிடையாது என்றால் சரியல்ல, சுமார் 8,9 வருடங்களாகவே பேச்சுவார்த்தை கிடையாது. 12.03.1998 ல் 1ம் பிரதிவாதிக்கு பரிவர்த்தனை ஆவணம் ஏறபாடு செய்துதருவதாக கூறி 1ம் தபசில் சொத்திற்கு 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா மாற்றம் செய்வதற்கு நான்முயற்சி செய்தேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பார்வதிக்கு எழுதபடிக்க தெரியாது என்றால் அவருக்கு எழுத படிக்க தெரியும்.

1ம் தபசில் சொத்துக்கு மேற்கு பகுதியில் தான் பிரதிவாதிகள் வீடு இருக்கிறது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் வீட்டிற்கு முன்வாசல் மற்றும் பின்வாசல் இருக்கிறது என்றால் சரிதான். பின்வாசல் வழியாக 1ம் தபசில் சொத்திற்கு போகலாம் என்றால் பிரதிவாதிகளின் வீடு காலனியில் உள்ளது அதன் பின்புறம் என் புஞ்சை நிலம் உள்ளது. பிரதிவாதியின் பின்புற வாசலுககு வடக்கே எனது 1ம் தபசில் சொத்து இருக்கிறது என்றால் சரிதான். 1ம் தபசில் சொத்தின் வழியாகத்தான் பிரதிவாதிகள் கிரையம் பெற்ற சொத்திற்கு செல்ல முடியும் என்றால் சரியல்ல. அவர்களுக்கு முன்வாசல் வழியாகவும் செல்லலாம். 2ம் பிரதிவாதி ரத்தினத்திற்கு செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் கிடைத்த சொத்தில் எலுமிச்சை பழம், பிச்சி, மல்லி செடிகள் விவசாயம் செய்து வருகிறார் என்றால் என்னுடைய சொத்தில் எலுமிச்சை செடிகள் மட்டும்தான் இருக்கிறது. 1ம் தபசில் சொத்தில் என்னுடைய இடத்தில் எலுமிச்சை செடிதான் உள்ளது. எலுமிச்சை பழத்தை எங்கு கொண்டு விற்பனை செய்கிறேன் என்றால் நான் மார்க்கெட்டில் தான் கொடுப்பேன். நயினா என்பவரின் கடையில் கொடுப்பேன். நயினா என்பவரை விசாரித்தால் எலுமிச்சை பழம் விற்பனை செய்த ரசீது தெரியவரும் என்றால் சரிதான். பிரதிவாதியின் பின்புறமுள்ள வாசலுக்கு கிழக்கே உள்ள இடத்தில் மாட்டுதொழுவம் இருந்து வருகிறது என்றால் சரிதான். 1ம் தபசில் சொத்திற்கு ஒரு பகுதியிலும் பிரதிவாதியின் கிரைய சொத்திலும் எலுமிச்சை, பிச்சி மற்றும் மல்லி செடி வைத்து பயிர் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. 1ம் தபசில் சொத்தின் மற்றொரு பகுதியில் பிரதிவாதிகள் தான் மேலும் பயிர் செய்துவருகிறார் என்றால் சரியல்ல.

பிரதிவாதி வீட்டிற்கு பின்புறம் உள்ள தொட்டிற்கு 1ம் தபசில் சொத்திலிருந்து தான் தண்ணிர் பைப் வழியாக எடுத்து வருகிறார் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் 12.03.1998 தேதியிலிருந்து 1ம் தபசில் சொத்தை தனது சொந்த சொத்தாக வாதிகள் அறிய பயன்படுத்திவருகிறார்கள்என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் 1ம் தபசில் சொத்தை அனுபவித்து வருகிற காரணத்தினால் நான் சுவாதீனபரிகாரம் கேட்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் காலம் கடந்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் காலவரை சடட்டத்திற்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி ரத்தினத்தின் கல்யணத்தில் கலந்து கொண்டோம் என்றால் சரிதான். அவருக்கு 2012 ஆண்டில் திருமணம் நடந்தது. அப்போது நாங்கள்அனைவரும் கூட்டுக்குடும்பமாகத்தான் இருந்தோம். அதன் 3 ஆண்டுகள் கழித்து நாங்கள் பிரிந்துவிட்டோம் என்றால் சரிதான். 1ம் தபசில் சொத்திற்கும் அதன் மேற்கு பகுதியில் உள்ள இடத்திற்கும் வரப்பு மற்றும் வாய்க்காலோ அமைப்பு பூமியில் இல்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.